ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2209/43 - 2021 ජනවාරි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.01.07

*2209/43 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல் இல. : 05/2021

திருத்தப்பட்டவாறான, மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 4 ஆம் மற்றும் 12 ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் -

(1) கள்ளினைப் பொருத்தவரையில் குறிப்பிட்ட திகதி முதற்கொண்டும் அதற்குப் பின்னரும், சில்லறை விற்பனை எல்லையானது, நாடு முழுவதும் தொடர்பிலும் மற்றும் பொதுவான கொள்வனவு தொடர்பாகவும் மூன்று (03) லீற்றராக இருத்தல் வேண்டும் எனவும் ;

(2) நாடு முழுவதற்குமான பொதுவான அளவுத் தொகையாக மூன்று (03) லீற்றர் பரிந்துரைக்கப்படுவதோடு அதற்கு அதிகமான எந்த ஒரு கள்ளும் குறித்த கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் தவிர, குறிப்பிட்ட திகதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் கொண்டு செல்லப்படக்கூடாது எனவும் ; மற்றும்

(3) 1985, ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 745 இத்தால் இரத்துச் செய்யப்படுவதாகவும்

இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, சனவரி 07.

01-556



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.